ஆயுத எழுத்து

ஆயுத எழுத்து
ஆய்வறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
AYUDA EZHUTHU
A PEER REVIEWED INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278 - 7550
மலர்: 13 அக்டோபர் - 2025 இதழ் : 10

# எம்.ஜி.ஆர். திரைவசனங்களில் அறம்

**கு.மு.இரமேஷ் பாபு**
முனைவர்பட்ட ஆய்வாளர், வேல்ஸ் பல்கலைக்கழகம்.
**நெறியாளர் முனைவர் தே.தேன்மொழி**
உதவிப்பேரசிரியர், வேல்ஸ் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

எம்.ஜி.ஆர். தமிழ் திரை உலகில் நடிகராக மட்டுமின்றி, அறம், ஈகை, மனிதநேயம் ஆகியவற்றைத் தம் திரைவசனங்களின் வழி மக்களிடம் கொண்டு சென்றவராகத் திகழ்கிறார். புராணக் கதைகளின் தாக்கத்தால் ஒரே மாதிரியாகச் சுழன்றுகொண்டிருந்த தமிழ் சினிமாவுக்கு புதிய உயிரூட்டலாக அவர் வழங்கிய வசனங்கள் அமைந்தன. "வசனங்களில் கூர்மையும் இரசனையும்" எனக் காலத்திய விமர்சகர்கள் பாராட்டியது, அவரது வசனங்களில் உள்ள அறச் சிந்தனைக்காகவே ஆகும். பெருமுறையார், நாலடியார், குறுந்தொகை முதலிய நூல்களில் "ஈகை" உயர்ந்த பண்பாகக் கூறப்பட்டுள்ளது. அவை போன்று எம்.ஜி.ஆர். வசனங்களும் வறியோரைத் தாங்கும், தன்னலமற்ற கொடைச் சிந்தனையை மக்களுக்கு பரப்பின.

**கருச்சொற்கள் :** ஈகை, வசனங்கள், திரை வசனம், மன்னன்.

**முன்னுரை**

புராணக் கதைகளால் புளித்துப்போய்க் கிடந்த தமிழ் சினிமாவுக்குத் தரமான வரலாற்று அடையாளத்தை வழங்கியது வசனம், அதுவரை திரை உலகம் கேட்காத தித்திக்கும் தமிழ் வசனங்களால் திரை ரசிகர்களின் செவிகளுக்கு இன்பச் சுவையை அவ்வசனங்கள் ஊட்டியது. இதை அக்கால திரை விமர்சகர்கள் 'வசனங்களில் கூர்மையும் இரசனையும் கூடியுள்ளது' எனக் கூறிப் பாராட்டினர். ஆரம்ப காலங்களில் நாடகங்களில் நடித்து, பின்னர் திரைப்படங்களில் சிறிய வேடங்களில் தலைகாட்டி தமிழ்த்திரையுலகின் முடிசூடா மன்னனாக வலம் வந்தவர் எம்.ஜி.ஆர்.. வாய்ப்புகளுக்காகக் காத்திருந்தபோது துவண்டதுமில்லை. பின்னர், தமிழ் திரையுலகின் சக்கரவர்த்தியாக இருந்தபோது துள்ளியதும் இல்லை. இத்தகைய வியத்தகு பண்பிற்குக் காரணம் அவரின்தலைமைப் பண்பும் வள்ளல் குணமுமே என்றால் அது மிகை ஆகாது. அவ்வள்ளலின் திரப்படங்களில் இடம்பெற்றுள்ள வசனங்களில் அறம் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஈகை பொருள் விளக்கம்**

**வறியார்க்குஒன்று ஈவதேஈகை; மற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து** -திருக்குறள்-221

எனும் குறளில் மீள் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகையாகும்; பிற கொடைகள் யாவும் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையது என்கிறார். ஈகை என்பது வறியவர்களுக்கு பதில் உதவி எதிர்பாராது கொடுக்கும் சிறு உதவியே ஈகை எனக் கொள்ளலாம். வறியவர்க்கு உதவி எதிர்பாராது வழங்குவதே உண்மையான ஈகை என்று திருக்குறளில் வலியுறுத்தப்படுகிறது. இதே கருத்தை எம்.ஜி.ஆர். திரைப்பட வசனங்கள் திரையுலகில் உயிர்ப்பித்தன. வறியோரின் துயரை அறிந்து உதவி